05.03.2025

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை, தமிழ்நாடு மண்டல நாட்டு நலப்பணித்திட்டம், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டம், எனது பாரதம் புதுக்கோட்டை மற்றும் ஜெ.ஜெ கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் இணைந்து புதுக்கோட்டை மாவட்ட அளவிலான இளையோர் நாடாளுமன்றம் பேச்சுப் போட்டிகளை நடத்தினர்கள். இந்நிகழ்வைக் கற்பக விநாயக கல்வி அறக்கட்டளை அறங்காவலர் முனைவர் கவிதா சுப்பிரமணியன் தலைமையேற்க போட்டிகளை திருவாரூர் மத்திய பல்கலைக்கழக இந்தி பேராசிரியர் திரு. இராஜரெத்தினம் அவர்கள் சிறப்புரையாற்றி இளையோர் நாடாளுமன்றத்தை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் 50 ஆண்டுகால நெருக்கடி நிலை இந்திய ஜனநாயகத்திற்கு உணர்த்திய பாடம் என்ற தலைப்பில் புதுக்கோட்டை மாவட்ட அளவில் பல்வேறு இடங்களில் மற்றும் கல்லூரிகளில் இருந்து 51 இளைஞர்கள் கலந்து கொண்டனர் சிறப்பாக உரையாற்றினார்கள். இதில் ஜெயலட்சுமி, அனுசுயா, சுபிக்சா, பிரியவர்சினி மற்றும் சசிகலா ஆகியோர் முறையே முதல் 5 இடங்களை பெற்று மாநில அளவில் நடைபெறும் இளையோர் நாடாளுமன்றத்திற்கு செல்ல தகுதி அடைந்தனர். கல்லூரியின் செயலர் திரு. நா. சுப்பிரமணியன் அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார். வெற்றி பெற்ற இளைஞர்களின் விவரங்கள் தமிழ்நாடு மண்டல நாட்டு நலப்பணித்திட்டம் சென்னைக்கும் மற்றும் எனது பாரதம் புதுக்கோட்டைக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இதில் ஜெ .ஜெ கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜ.பரசுரமன் மற்றம் எனது பாரதம் புதுக்கோட்டை மாவட்ட இளையோர் அலுவலர்

திரு. ஜோயல் பிரபாகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்கள். முன்தாக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் இரா மணிமாறன் வரவேற்புரை ஆற்றினார், முனைவர் தயாநிதி நன்றி உரையாற்றினார். இதில் எனது பாரதம் உதவி அலுவலர் முனைவர் இரா. நமச்சிவாயம் கலந்து கொண்டனர்.

முதல்வர்